



**அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமீரக பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை**

| | |
|---|---|
| வெளியிடு | ஐக்கிய அரபு அமீரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(http://www.awqaf.gov.ae) |

வெள்ளிக்கிழமை ரமளான் பிறை 19 ஹிஜ்ரி 1437

Friday of Ramadan 24th Hijri 1437

24th June 2016

| | |
|---|---|
| தலைப்பு: | **இறுதி பத்து நோன்புகள்!** |



| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுல் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971 52 9919346 & Email : abusalih100@gmail.com<br>w w w . s u n n a t h w a l j a m a t h . c o m |



*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்() மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | இறுதி பத்து நோன்புகள்! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன் மேன்மையானவன், மகத்துவம் நிறைந்தவன். பரிசுத்த நாயனாகிய அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(16:30)

وَقِيلَ لِلَّذِينَ اتَّقَوْا مَاذَا أَنْزَلَ رَبُّكُمْ قَالُوا خَيْرًا لِلَّذِينَ أَحْسَنُوا فِي هَذِهِ الدُّنْيَا حَسَنَةٌ وَلَدَارُ الْآخِرَةِ خَيْرٌ وَلَنِعْمَ دَارُ الْمُتَّقِينَ

“இறை அச்சமுடையவர்களை நோக்கி (இக்குர்ஆனைப் பற்றி) "உங்கள் இறைவன் என்ன இறக்கிவைத்தான்" என்று கேட்கப்பட்டால், அதற்கவர்கள், "நன்மையையே (இறக்கி வைத்தான்)" என்று கூறுவார்கள். (ஏனென்றால்) நன்மை செய்தவர்களுக்கு இவ்வுலகிலும் நன்மைதான். (அவர்களுடைய) மறுமையின் வீடும் மிக்க மேலானது. இறை அச்சமுடையவர்களின் வீடு எவ்வளவு நேர்த்தியானது!”

**தொழுகையாளிகளே**! அல்லாஹ் தஆலா சில நாட்களை தேர்ந்தெடுத்திருக்கிறான். அந்த நாட்களில் செய்யப்படும் அமல்களுக்கு மேலதிகமான நன்மைகளையும், சிறப்புகளையும் தருகிறான். விசாலமான தனது அளவற்ற கருணைகளை அடியார்கள் மீது அல்லாஹ் இந்த நாட்களில் பொழிகிறான். அதிகமாக வணக்கம் செய்வதற்கான உற்சாகத்தை இந்த நாட்களில் வைத்திருக்கிறான். மற்ற நாட்களை விட இந்த நாட்களில் அதிகமான மக்கள் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுகிறார்கள். எண்ணற்ற பல நற்செயல்கள் மூலம் பரிசுத்த நாயனாகிய அல்லாஹ்விடம் அடியார்கள் நெருங்கி வருகிறார்கள். அவனுடைய வெகுமதிகளையும்

பெற்றுக் கொள்கிறார்கள். முழுமையான அவனுடைய கிருபைகளை அடைகிறார்கள். சங்கை நிறைந்த இந்த மாதத்தில் மிகவும் சிறப்பிற்குரிய நாட்கள் கடைசி பத்து நாட்களாகும். நல்லொழுக்கமுள்ள சிறந்த அடியார்களாக வாழும் விருப்பம் உள்ளவர்கள் இந்த நாட்களை நன்றாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உண்மையான அடியார்களோடு சேர்ந்து வணக்கங்களில் ஈடுபட்டு வாழ்வில் ஏற்றம் பெற வேண்டும். முயற்சிகளில் சோர்ந்துவிடக் கூடாது. வணக்கத்தில் ஈடுபடும்போது பொறுமையோடு நிதானமாக செயல்பட வேண்டும், உள்ளச்சத்தோடும் பேணிக்கையோடும் நடந்து கொள்ள வேண்டும்.

ரமளான் மாதத்தின் கடைசி பத்து நாட்களை நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வெகுவாக வரவேற்று கண்ணியப்படுத்தியுள்ளார்கள். இந்த மாதத்தின் மற்ற நாட்களைக் காட்டிலும் இந்த பத்து நாட்களின் பகலிலும், இரவிலும் சிறப்பான வணக்கங்களில் ஈடுபடுவார்கள். காரணம் இந்த நாட்களில் செய்யப்படும் நற்செயல்களுக்கு ஏராளமான நன்மைகளும், சிறப்புகளும் உள்ளன.

முஃமீன்களின் தாயார் அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்: (வணக்க வழிபாடுகளில்) மற்ற நாட்களில் காட்டாத (அதிக) ஈடுபாட்டை, அல்லாஹ்வின் தூதர் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (ரமளானின்) இறுதிப்பத்து நாட்களில் காட்டுவார்கள். (1175 :مسلم)

இந்த நாட்களில் உள்ள இரவுகள் முழுவதையும் அதிகமான தொழுகையிலும், திருக்குர்ஆன் ஓதுவதிலும் கழிப்பார்கள். திருக்குர்ஆனை மிகவும் தெளிவான உச்சரிப்போடு நிதானமாக ஓதுவார்கள். இறையருள் தொடர்பான வசனங்களை ஓதினால் உடனே இறைவனின் அருளை வேண்டி துஆச் செய்வார்கள். வேதனைகளை பற்றிய வசனங்களை ஓதும்போது அத்தகைய வேதனையில் இருந்து பாதுகாப்பு தேடிக் கொள்வார்கள்.

இரவில் நின்று தொழுவதற்காக தன்னுடைய குடும்பத்தார்களையும் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எழுப்பிவிடுவார்கள். “ரமளான் மாதத்தின் கடைசி பத்து இரவுகளில் இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன்னுடைய குடும்ப உறுப்பினர்களையும் எழுப்புவார்கள். தொழுவதற்கான ஆற்றலை பெற்ற ஒவ்வொரு சிறியவர்களையும், பெரியவர்களையும் எழுப்பிவிடுவார்கள் என்று ஹஜ்ரத் அலி இப்னு அபூதாலிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள். ( : الترمذي 795 مختصرا ، والطبراني في المعجم الأوسط 253/7)

இதிலிருந்து ஒரு முஸ்லிம் நல்ல படிப்பினையை புரிந்து கொள்ள வேண்டும். அதாவது தன்னுடைய குடும்ப உறுப்பினர்களையும் நன்மை செய்ய தூண்ட வேண்டும். வணக்க வழிபாடுகளில் அவர்களுக்கு ஆர்வமூட்ட வேண்டும். அவர்களோடு சேர்ந்து நற்செயல்களில் ஈடுபட வேண்டும். இப்படி செய்வதால் அளவற்ற கூலியையும், எண்ணற்ற பல சிறப்புகளையும் பெற முடியும். இல்லம் எங்கும் ஈமானிய ஒளி நிறைந்திருக்கும்.

“(ரமளானின் கடைசிப்) பத்து நாட்கள் வந்துவிட்டால் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரவை (அல்லாஹ்வைத் தொழுவதன் மூலம்)

உயிர்ப்பிப்பார்கள்; (இறைவனை வணங்குவதற்காகத்) தம் குடும்பத்தினரையும் எழுப்பிவிடுவார்கள்! என்று அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கிறார்கள். (متفق عليه واللفظ لمسلم)

"ரமளான் மாதத்தின் கடைசி பத்து நாட்களில் வணக்க வழிபாடுகளை அதிகப்படுத்துவது மிகவும் விரும்பத்தக்க செயலாகும். இரவு காலங்களை அதிகமான தொழுகையில் ஈடுபட வேண்டும் என்றும் ஹதீஸ்களில் வந்துள்ளது. ((71/8) :شرح النووي على مسلم)

வணக்க வழிபாடுகளில் ஈடுபட வேண்டும் என்று கணவன்மார்கள் தங்களுடைய மனைவிகளையும் தூண்ட வேண்டும் என்றும் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆர்வமூட்டுகிறார்கள்:

إِذَا اسْتَيْقَظَ الرَّجُلُ مِنَ اللَّيْلِ وَأَيْقَظَ امْرَأَتَهُ فَصَلَّيَا رَكْعَتَيْنِ كُتِبَا مِنَ الذَّاكِرِينَ اللَّهَ كَثِيرًا وَالذَّاكِرَاتِ

"இரவில் ஒரு மனிதன் தூங்கி எழுந்து பின்னர் தன்னுடைய மனைவியை எழுப்புகிறார். பின்னர் இருவரும் இரண்டு ரகஅத்துகள் தொழுகிறார்கள். அல்லாஹ்வை அதிகமாக திக்ர் செய்யக்கூடிய ஆண்கள் மற்றும் பெண்கள் பட்டியலில் இவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் (1335: وابن ماجه 2569 :صحيح ابن حبان)

கணவனும் மனைவியும் சேர்ந்து தொழுகையில் ஈடுபட்டு வந்தால் வீடு முழுவதும் ஒளிமயமாக இருக்கும், மேலும் நற்பாக்கியங்களும் நிறைந்திருக்கும். இறைவனோடு நேரடியாக இறையஞ்சி துஆ கேட்கும் சுவையை இருவரும் உணர்ந்து கொள்ள முடியும். தங்களுக்காகவும், தங்களை ஈன்ற பெற்றோர்களுக்காகவும், மற்ற ஏனைய முஃமீன்களுக்காகவும் பிழைபொறுக்க தேடும் வாய்ப்பும் கிடைக்கும். சஹருடைய இந்த முக்கியமான நேரத்தில் தங்களுடைய பிள்ளைகளுக்காகவும் துஆச் செய்யலாம். இதனால் நற்பாக்கியங்களும், மன அமைதியும், அன்பும் அக்கறையும், இறையருளும் இந்த தம்பதிகளை சூழ்ந்து நிறைந்திருக்கும்.

ஹஜ்ரத் உமர் இப்னு கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹ் நாடிய விதத்தில் இரவில் நின்று வணங்கிக் கொண்டிருப்பார்கள். இரவில் நடுநிசிக்கு பிறகு தன்னுடைய குடும்பத்தார்களை தொழுவதற்காக எழுப்புவார்கள். அவர்களை எழுப்பிய பிறகு பின்வரும் இறைவசனத்தை ஓதுவார்கள்: (20:132)

وَأْمُرْ أَهْلَكَ بِالصَّلاَةِ وَاصْطَبِرْ عَلَيْهَا لاَ نَسْأَلُكَ رِزْقًا نَحْنُ نَرْزُقُكَ وَالْعَاقِبَةُ لِلتَّقْوَى

"(நபியே!) தொழுது வருமாறு நீங்கள் உங்கள் குடும்பத்தினரை ஏவுங்கள். நீங்களும் அதன் மீது உறுதியாக இருங்கள். (இதற்காக) நாம் உங்களிடம் யாதொன்றையும் கேட்கவில்லை. உங்களுக்கு வேண்டியவற்றை எல்லாம் நாமே கொடுக்கிறோம். முடிவான நன்மை பரிசுத்த தன்மைக்குத்தான்"



www.sunnathwaljamath.com

வணக்க வழிபாடுகளில் ஈடுபடுதற்கு இந்த வளமை பொருந்திய இரவுகளை பொன்னான வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எல்லாம் வல்ல அல்லாஹ் தன்னுடைய நபியிடம் பின்வருமாறு கூறுகிறான்: (76:26)

وَمِنَ اللَّيْلِ فَاسْجُدْ لَهُ وَسَبِّحْهُ لَيْلاً طَوِيلاً

“இரவிலும், அவனுக்குச் சிரம் பணிந்து வணங்கி, இரவு நேரத்தில் நெடு நேரம் அவனைத் துதி செய்து கொண்டிருப்பீராக!”

இமாம் தொழுகையை முடிக்கும் வரை யார் இமாமோடு சேர்ந்து தொழுகிறாரோ நிச்சயம் அவருக்கு இரவில் நின்று வணங்கிய நன்மை கிடைக்கும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ قَامَ مَعَ الإِمَامِ حَتَّى يَنْصَرِفَ كُتِبَ لَهُ قِيَامُ لَيْلَةٍ

“இமாம் தொழுகையை முடிக்கும் வரை யார் இமாமோடு சேர்ந்து தொழுகிறாரோ நிச்சயம் அவருக்கு இரவு முழுவதும் நின்று தொழுத நன்மை எழுதப்படும் (الترمذي : 806 ، والنسائي : 1605)

இந்த நாட்களில் பல்வேறு வகையான வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு நன்மைகளை தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும். எனவே தஸ்பீஹ் செய்வது, ஸலவாத் ஓதுவது, திக்ர்கள் செய்வது, திருக்குர்ஆன் ஓதுவது போன்ற வணக்கங்களிலும் ஈடுபட வேண்டும். பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் தன்னுடைய தூதர் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு கூறுகிறான்: (76:25)

وَاذْكُرِ اسْمَ رَبِّكَ بُكْرَةً وَأَصِيلاً

“காலையிலும் மாலையிலும் உங்களது இறைவனின் திருநாமத்தை(க் கூறி) நினைவுகூருங்கள்”

அதேபோன்று அவனிடமே மன்றாடி துஆச் செய்ய வேண்டும் என்கிற கட்டளையையும் இறைவன் கூறிக்காட்டுகிறான்: (2:186)

وَإِذَا سَأَلَكَ عِبَادِي عَنِّي فَإِنِّي قَرِيبٌ أُجِيبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ فَلْيَسْتَجِيبُوا لِي وَلْيُؤْمِنُوا بِي لَعَلَّهُم يَرْشُدُونَ

“(நபியே!) உங்களிடம் என்னுடைய அடியார்கள் என்னைப் பற்றிக் கேட்டால் (அதற்கு நீங்கள் கூறுங்கள்:) "நிச்சயமாக நான் சமீபமாகவே இருக்கின்றேன். (எவரும்) என்னை அழைத்தால் அந்த அழைப்பாளரின் அழைப்புக்கு விடையளிப்பேன்" ஆதலால் அவர்கள் என்னிடமே பிரார்த்தனை செய்யவும். என்னையே நம்பிக்கை கொள்ளவும். (அதனால்) அவர்கள் நேரான வழியை அடைவார்கள்”

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

الصَّائِمُ لاَ تُرَدُّ دَعْوَتُهُ



www.sunnathwaljamath.com

“நோன்பாளியின் துஆ நிராகரிக்கப்படாது (10452 : أحمد)

பொதுவாக நல்லடியார்களோடு சேர்ந்து பழகி வந்தால் இது போன்ற தருணங்களில் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுதற்கான ஆர்வம் அதிகமாகும். சோம்பேறித்தனத்தையும், அக்கறையின்மையையும் ஒழித்துவிட முடியும். வணக்க வழிபாடுகளில் மிக அக்கறையோடு ஈடுபட்டிருக்கும் அடியார்களோடு சேர்ந்து இருக்க வேண்டும் என்று படைப்புகளிலேயே மிகச் சிறந்த படைப்பாகிய தன்னுடைய தூதர் கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அறிவுறுத்துகிறான்: (18:28)

وَاصْبِرْ نَفْسَكَ مَعَ الَّذِينَ يَدْعُونَ رَبَّهُمْ بِالْغَدَاةِ وَالْعَشِيِّ يُرِيدُونَ وَجْهَهُ

“(நபியே!) எவர்கள் கஷ்டங்களைச் சகித்துத் தங்கள் இறைவனின் திருமுகத்தையே நாடி அவனையே காலையிலும், மாலையிலும் (பிரார்த்தனை செய்து) அழைத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுடன் உங்களையும் நீங்கள் ஆக்கிக் கொள்ளுங்கள்”

யா அல்லாஹ் எங்களுடைய நற்செயல்களை ஏற்றுக் கொள்வாயாக!

**கவனமாக கேளுங்கள் !தொழுகையாளிகளே** !!அல்லாஹ்விற்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள் .அவனுக்கு தொடர்ந்து கீழ்படிந்து நடங்கள் .தர்மங்கள் செய்வதினாலும் தன்னார்வ பணிகளில் ஈடுபடுவதினாலும் நமது அமீரக அரசின் பெருமையை நாம் நிலைநாட்ட வேண்டும் .அனைவரிடமும் வரவேற்பு பெற்ற மனிதநேய சேவைகளிலும் ஈடுபட வேண்டும் .

இன்றைய இந்த நாள் ஜூன் 24, 2016 **ஜாயித் மனிதநேய நாள் (Zayed Humanitarian Day)** ஆகும். மதிப்பு வாய்ந்த பழைய நினைவுகளை நாம் மீட்டெடுக்க வேண்டும். மேலும் அந்த சேவையால் ஏற்பட்ட நல்ல விளைவுகளையும் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும். ஐக்கிய அரபு அமீரக அரசை நிறுவி அதன் கலாச்சாரத்தை கட்டமைத்துக் கொடுத்த மாண்புமிகு ஷைக் ஜாயிது இப்னு ஸுல்தான் ஆல் நஹ்யான் (அல்லாஹ் அவர்களின் ஒதுங்குமிடத்தை தூய்மையாக்குவானாக) அவர்களும், மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களும் தான் இந்த உன்னத நற்பணியை தொடங்கி வைத்தார்கள்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுதற்காக எல்லை கடந்து சென்று தர்மம் செய்ய வேண்டும் என்கிற உன்னத அனுபவ அறிவை மன்னர் ஜாயித் அவர்களின் பாசறையிலே நாம் பெற்றிருக்கிறோம். நற்பணி செய்வதில் நாம் எந்த பாகுபாடும் பார்க்க கூடாது என்கிற அறிவுரையையும் அவர்கள் நமக்கு வழங்கியுள்ளார்கள். எனவேதான் நாம் மொழி, இனம், மதம், தேசம், நிறம் என எல்லாவற்றையும் கடந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுகிறோம். இன்றைய காலத்தில் நமது அமீரகத்தின் நற்பணிகள் இப்பூமியின் பல்வேறு பகுதிகளில் பறந்து விரிந்துள்ளன. பின்வரும் நபிமொழியை மெய்ப்பிக்கும் விதமாக இதனை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது:

فِي كُلِّ كَبِدٍ رَطْبَةٍ أَجْرٌ

“ஈர நெஞ்சம் கொண்ட ஒவ்வொருவருக்கும் கூலி உண்டு” (متفق عليه)

(குறிப்பு: இந்த ஹதீஸிற்கு இப்படியும் பொருள் உண்டு: *“உயிருள்ள பிராணி ஒவ்வொன்றின் விஷயத்திலும் (அதற்குக் கருணை காட்டினால்) உங்களுக்குப் பிரதிபலன் உண்டு”* - மொழிபெயர்ப்பாளர்)

தொடர்ந்து சமூதாய நற்பணிகளில் ஈடுபடுவது அமீரகத்தின் இயல்பான ஒரு பழக்கமாக அறியப்படும் அளவிற்கு நமது சேவைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ سَنَّ فِي الإِسْلاَمِ سُنَّةً حَسَنَةً فَلَهُ أَجْرُهَا، وَأَجْرُ مَنْ عَمِلَ بِهَا بَعْدَهُ، مِنْ غَيْرِ أَنْ يَنْقُصَ مِنْ أُجُورِهِمْ شَيْءٌ

"யார் இஸ்லாத்தில் ஓர் அழகிய நடைமுறையை உருவாக்குகிறாரோ அவருக்கு அதற்குரிய நன்மையும் அவருக்குப் பின் அதன்படி செயல்படுபவர்களின் நன்மையும் உண்டு; அதற்காக அவர்களது நன்மையில் எதுவும் குறைந்துவிடாது (1017 : مسلم)

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

“ஈமான்கொண்ட நல்லடியார்களே! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்”

அல்லாஹ்வின் நல்லடியார்களே! வல்ல அல்லாஹ் நபி மீது ஸலவாத் சொல்லும் செயலை தன்னிடமிருந்தே தொடங்கி, அதில் மலக்குமார்களையும் சேர்த்து உண்மை மு஼மின்களாகிய நம்மையும் சொல்லச்சொல்கிறான் : (33:56)

إِنَّ اللَّهَ وَمَلائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا

“இந்த நபியின் மீது அல்லாஹ் (ஸலவாத் ஓதி) அருள்புரிகிறான். மலக்குகளும் அவருக்காக (ஸலவாத்ஓதி) அருளைதேடுகிறார்கள். மூமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத் சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்”

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!,

மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹூ அன்ஹூம் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்த்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்க்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்க்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).



www.sunnathwaljamath.com